# தொல்லியல் நோக்கில் நாகப்பட்டின பௌத்தம்
# An Archaeological Study of Buddhism in *Nagapattinam*

செ. தமிழ் சங்கர் / S. Tamil Sankar[1]

**Abstract**

Through the inscriptions of Ashoka's Granar and Bishawar, we could see that the entry of Buddhism to Tamil Nadu was around the third century B.C; however, the historical accounts of the time and the accurate period of entry of Buddhism into Tamil Nadu could not be found in any Tamil books. While the *Jains* came through the western costal line, the Buddhist came through the eastern coastal line, and extended their influence to the southern land. In the fifth inscription of King Ashoka, evidence of erecting *buddh vihar* (Buddhist monastery) in *Chola* kingdom, more accurately in *Nagapattinam* were found. This finding was further strengthened by travelogue of Yuvan Suwang, a Chinese traveller, where he recorded his visit to the *budh vihar* built by King Ashoka between 629 and 645 B.C. After the demolition of *Kaveripoompatinam*, *Nagapattinam* was built during the *Chola* period by replicating the structure of the former city. It had been a trade center to the far-west nations as well as an important hotspot for the spread of Buddhism. In the period of *Raja Raja Chola, Sri Maravijayathungavarman,* the king of *Kadaram,* built a *budh vihar* called "*Sudamani*" in the memory of his father. This *vihar* was also referred to as "*Rasaraja Perumpalli*". *Rajaraja* donated the village named "*Aanaimangalam*" as a gift to this *vihar*. Evidence of this was found in *Anaimangalam*'s bronze pamplets. In the year 1965, the archaeological excavation in a place called *Palavaneswaram* unearthed an intact *budha vihar* that dated to 3rd century A.D. A Buddha statue in the yogic pose, roasted clay statues of deities, cow's bone, and Buddha's feet made of limestone were also found. In 4th Century A.D, a person named Buddhathathan wrote two books entitled "*Abhidhamavatharam*" and "*Vinayavichayam*" in *Pali* language, which were published by the *bhudh palli* built by Ganadhasan. The presence of many *buddha vihars* in *Nagapatinam* and *Poompugar* could be found in the Buddhist text called "*Rasavagini*", which was also written in *Pali* language. Based on these findings, this article focuses on providing archaeological evidences for the vast spread of Buddhism during the Ashoka's and Chola's empires

Date of submission: 2021-05-27
Date of acceptance: 2021-09-20
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name:
S. Tamil Sankar
Email: tamilsankar07@gmail.com

**Key Words:** inscription, yuvan suwang, kaveripoompatinam, budh vihar, bhudh palli, rasavagini in Pali language.

## முன்னுரை

பௌத்த சமயம் தமிழ்நாட்டிற்கு முதன் முதலில் எப்போது வந்தது என்கின்ற தகவல் தமிழ் நூல்களில் காணப்படவில்லை. ஆயினும் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் பௌத்த சமயம் தமிழ்நாட்டிற்கு வந்ததை அசோகரின் கிரனார் கல்வெட்டு மற்றும் பிஷாவர் கல்வெட்டு ஆகியவற்றின் மூலம் அறியலாம். சமண சமயம் மேற்குக் கடற்கரையின் வழியாகவும், பௌத்தம் சமயம் கிழக்குக் கடற்கரையின் வழியாகவும், தங்களின் ஆதிக்கத்தைத் தென்னகத்தில் பரப்பின. அவற்றுள் கிழக்குக்கடற்கரையில்

[1] The author is a Research scholar at Department of Tamil, School of Languages Literature & Culture, Visva- Bharati Central University, Santiniketan, west Bengal, India.tamilsankar07@gmail.com

இருந்த நாகப்பட்டினம் பௌத்த சமயம் பரப்புவதற்கு ஒரு முக்கிய இடமாகவும், கீழ்த்திசை நாடுகளுக்குச் சிறந்த வணிக மையமாகவும் விளங்கியது. அந்நகரில் செழிப்புற்று விளங்கிய பௌத்தம் தொடர்பான இலக்கியம் மற்றும் கல்வெட்டுக்கள், தொல்லியல் சான்றுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

### அசோகரின் பிஷாவர் கல்வெட்டு

பிஷாவர் நகரத்திற்கு அருகில் காணப்படுகின்ற இந்த சாசனம் (ஸிஷீநீளீ ணிபீவீநீளீ 3), போர் செய்து பலரைக் கொன்று அதனால் பெறும் வெற்றியைவிட அறத்தைப் போதித்து அதனால் பெறும் அறவெற்றியே தமக்கு விருப்பமானது என்பதை தமது பிள்ளைக்கும், பேரப்பிள்ளைக்கும் அசோக மன்னர் தெரிவிக்கிற செய்தியைக் கூறுகின்றது.

> “தரும விஜயம் (அறவெற்றி) என்னும் வெற்றியே மாட்சி மிக்க அரசால் (அசோக மன்னரால்) முதல் தரமான வெற்றியென்று கருதப்படுகின்றது. இந்த வெற்றி இந்த இராச்சியத்திலும், இதற்கப்பாற்பட்ட அறநூறுயோசனை தூரத்திலுள்ள அண்டியொகஸ் என்னும் யவன அரசனுடைய தேசத்திலும் அதற்கும் அப்பா டாலமி, அண்டிகொனஸ், மகஸ் அலெக்ஸாந்தர் என்னும் பெயருள்ள நான்கு அரசர்களின் தேசத்திலும், இப்பால் தொற்கேயுள் சோழபாண்டிய, தாம்பிரபரணி (இலங்கை) வரையிலும் இந்த (அற) வெற்றி அடிக்கடி அரசரால் கைப்பற்றப்பட்டது”.

இந்த சாசனம் கி. மு 258 இல் எழுதப்பட்டது. அசோக சக்கரவர்த்தி துதர்களை (பிக்ஷுக்களை) அனுப்பி பௌத்த தருமத்தை தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் இன்னும் பிற நாடுகளும் பரவவச்செய்தார். இக்கருத்தையையே ஆராய்ச்சியாளர்களும் குறிப்பிடுகின்றனர். எனவே அசோகரின் பிஷாவர் கல்வெட்டு தமிழகத்திலும் இலங்கையிலும் பௌத்த மதத்தைப் பரப்பியதற்கான செய்தியைக் கூறுகிறது எனலாம்.

### காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றிய வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்பு


காவிரிப்பூம்பட்டினத்தைக் கிரேக்க நாட்டறிஞரான தாலமி (Ptolemy) தமது பயணக்குறிப்பில் காபேரிஸ் (Chaberis) என்று குறிப்பிடுகிறார். பெரிப்ளூஸ் (Peripus) என்னும் நூலில் காமாரா என்ற குறிப்பு காணப்படுகிறது.

### இலக்கியங்களில் பௌத்த எச்சங்கள்

பண்டைய காலம் முதல் காவிரிப்பூம்பட்டினம் வணிக மையமாகவும் பௌத்த சமயம் பரப்புவதற்கு ஒரு முக்கிய இடமாகவும் விளங்கியது. காவிரியாறு கடலில் கலக்கும் இடத்தில் அதன் வடகரையில் அமைந்த துறைமுகப்பட்டின நகரமாகக் காவிரிப்பூம்பட்டினம் திகழ்ந்தது. புலவர் ஞா. தியாகராஜன் அவர்கள் தமது பூம்புகாரின் வரலாற்று எச்சங்கள் என்ற நூலில், பாலி மொழியில் இயற்றப்பட்ட பௌத்த சமய இலக்கியங்களில் ‘கவீரபட்டினமும், கோளபட்டணமும்‘ காவிரிப்பூம்பட்டினத்தைக் குறிப்பிட்டிடுவதாக பதிவு செய்கிறார். மேலும் புத்த ஜாதகக் கதையில் இடம்பெற்றுள்ள ‘கவீரபட்டினம்’ என்ற சொல் காவிரிப்பூம்பட்டினத்தைக் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் பௌத்தம் சமயப் பதிவாகிய பார்ஹூத் நகரில் நிறுவப்பட்ட ஸ்தூபிக் கல்வெட்டில் ‘காகந்தி நகரத்தைச் சேர்ந்த சோமா என்ற பிக்குனி புண்ணிய தானம் வழங்கினாள்’ என்ற செய்தி காணப்படுகிறது.

படம்.2. பார்ஹூத் ஸ்தூபிக் கல்வெட்டுகள்



“காகந்தியா சோமாய பிச்சுனியா தானம்”

காவிரிப்பூம்பட்டினம் அக்காலத்தில் ‘காகந்தி’ என்ற பெயரில் வழங்கப்பெற்றதை மணிமேகலையும் நீலகேசியும் குறிப்பிடுகின்றன.

*"ககந்தன் காத்தல் காகந்தி யென்றே*

*இயைந்த நாமம் இப்பதிக் கிட்டீங்" (மணி.22;3738)*

*"காதம் பலவும் கடந்தபின் காகந்திக் கடிநகருள்" (நீல.8241)*

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சிவன் கோவில், முருகன் கோவில், பலராமன் கோவில், திருமால் கோவில், சமண சமயத் தொடர்புடைய அருகப்பள்ளிகள், பௌத்த சமயம் தொடர்பான புத்த பள்ளிகள் ஆகியன காவிரிப்பூம்பட்டினத்தில் காணப்பட்டதாகக் குறிப்பிடுகின்றன.

*"பிறவா யாகைப் பெரியோன் கோயிலும்*

*அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்*

*வால்வளை மேனி வாலியோன் கோயிலும்*

*நீலமேனி நெடியோன் கோயிலும்*

*மாலைவெண்குடை மன்னவன் கோயிலும்"*

சிலப். 5; 169-173.

*"அறவோர் பள்ளியும் அறன் ஓம்படையும்*

*புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்"*

சிலப். 5; 179-180.

*''நுதல் விழி நாட்டத்து இறையோன் முதலாப்*

*பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீறாக"*

மணி. 1; 54-55.

மேலும் காவிரிப்பூம்பட்டினத்தில் சமணப் பள்ளியும், பௌத்தப் பள்ளியும் சமணர்களுக்கும், பௌத்தர்களுக்கும் தவம் செய்யும் இடமாக முற்காலம் தொட்டே காணப்படுவதைப் பட்டினப்பாலை விளக்குகிறது.

*"தவப்பள்ளியும் தாழ்காவின்*

*அவிர்சடை முனிவர் அங்கி வேட்கும்"*

பட்டி. 53-54.

## இந்திர விகாரம்

சோழநாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரனால் கட்டப்பட்ட இந்திர விகாரம் உட்பட ஏழு விகாரங்களைக் கடந்து கோவலனும், கண்ணகியும் மதுரைக்குச் சென்றதாக சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரை குறிப்பின் மூலமாகவும் அறியலாம்.

*"பணையைந் தோங்கிய பாசிலைப்போதி*

*அணிதிகழ் நீழலற வோன் திருமொழி*

*அந்தர சாரிகள் அறைந்தனர் சாற்றும்*

*இந்திரவிகாரம் ஏழுடன் போகி"*

சிலப்.10; 11-14.

மேலும் தன் மகன் கோவலனுக்கு ஏற்பட்ட கொடுந்துயரை எண்ணி மாசாத்துவன் தன் செல்வங்களையெல்லாம் தானமாக வழங்கிவிட்டு துறவியாக இந்திர விகாரத்தில் சேர்ந்தாகவும், ஆகாயமார்க்கமாக செல்லக்கூடிய அந்தரசாரிகள் உறையும் இடமாக விளங்கியதைச் சிலப்பதிகாரமும் மற்றும் மணிமேகலையும் குறிப்பிடுகிறது.

*''இந்திர விகாரம் ஏழுடன் புக்காங்கு*

*அந்தரசாரிகள் ஆறைம் பதின்மர்"*

சிலப். 27; 92-93.

*"இந்திர விரகாரம் ஏழும் ஏத்துதலின்"*

மணி. 26; 55.

*"அந்தரசாரிகள் அமர்ந்து இனிது உறையும்*

*இந்திர விரகாரம் என எழில் பெற்று"*

மணி. 28; 69-70.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோக சக்கரவர்த்தியின் உறவினரான மகிந்தன் என்பவர் இலங்கைக்குச் சென்று பௌத்த சமயத்தை பரப்புவதற்கு முன் சோழநாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தில் தங்கி இந்திர விகார் உட்பட ஏழு பௌத்த விகாரங்களைக் கட்டினாரென்று மயிலை. சீனி. வேங்கடசாமி பௌத்தமும் தமிழும் எனும் நூலில் குறிப்பிடுகிறார். ஆனால் மகா இந்திரன் என்னும் பெயர் பாலி மொழியில் மகிந்தன்

என்றே பொருள்படுகிறது. மேலும் மகிந்தன் கட்டியதாகக் கருதப்படும் விகாரையைச் சிதைந்த நிலையில் காவிரிப்பூம்பட்டினத்தில் தான் கண்டதாக சீனப் பயணி யுவான்சாங் குறிப்பிட்டிருப்பதாக மு. இராகவய்யங்கார் தமது ஆராய்ச்சித் தொகுதி நூலில் குறிப்பிட்டுள்ளார்.

### கணதாசனால் அமைக்கபட்டிருந்த பௌத்தப் பள்ளி

மயிலை சீனி வேங்கடசாமி அவர்களின் பௌத்தமும் தமிழும் என்ற நூலில், கி.பி. நான்காம் நூற்றாண்டில் அச்சுத விக்கந்தன் என்னும் களப்பிர அரசரால் ஆதரிக்கப்பட்ட புத்ததத்தன் என்பவன், காவிரிபூம்பட்டினத்தில் கணதாசனால் அமைக்கபட்டிருந்த பௌத்தப் பள்ளியில் தங்கி அபிதம்மாவதாரம், என்னும் நூலையும், மதுரத்தவிலாஸனீ என்னும் உரை நூலையும் எழுதினார் என்ற செய்தி காணப்படுகிறது. அந்த இரு நூல்களின் இறுதியில் காவிரிபூம்பட்டினம் பற்றிய குறிப்புகள் உள்ளதாக மயிலை சீனி வேங்கடசாமி குறிப்பிடுகிறார். ஆனால் அந்த குறிப்பில் எவ்வித செய்திகள் உள்ளன என்பதைக் குறிப்பிடவில்லை. அபிதம்மாவதாரம் மதுரத்தவிலாஸனீ ஆகிய இரு நூல்களும் தற்காலத்தில் கிடைக்கவில்லை. ஆனால் அந்த நூல்கள் கிடைக்கும் பட்சத்தில் காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றி என்னென்ன செய்திகள் இடம்பெற்றுள்ளன என்பதைப் பற்றி அறியமுடியும்.

### தொல்லியல் அகழாய்வு பல்லவனேஸ்வர விகாரம்


மேலையூர்ப்பகுதியில் பல்லவனேஸ்வரம் திருக்கோவிலுக்கு வடக்கேயும், நகரத்தார் சத்திரத்திற்கு கிழக்கிலும், 1963-64-ஆம் ஆண்டு பல்லவனேஸ்வரம் என்ற இடத்தில் அகழாய்வின் மூலம் முழுமையான பௌத்த விகாரம் கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் இங்கு புத்தபிரானை வணங்குவதற்கும், துறவிகள் தங்குவதற்கும், தியானம் செய்வதற்கும் ஏற்ற வகையில் ஐந்து தனித்தனி அறைகளைக் கொண்ட கட்டிடமும், 3.5 மீட்டர் சதுர வடிவிலும், 1.7 மீட்டர் அகலத்தையும், 42 X 24 X 40 செ. மீட்டர் அளவிலான செங்கற்களைக் கொண்டு கட்டிடம் கட்டப்பட்டிருந்தது. முன் பக்கத்தில் உயர்ந்த மேடையும், இடையில் நீண்ட திண்ணையும் அமைக்கப்பட்டு இருந்தது. இந்தக்கட்டிடம் கி.பி. மூன்றாம் மற்றும் நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக கணக்கிட்டுள்ளார்கள்.

இக்கட்டிடத்திற்குத் தெற்குப் பக்கத்தில் காணப்படும் புத்த சைத்தியம் பஞ்சரதக் கோவிலாக குறிப்பிடுகிறார்கள். 33.5 மீட்டர் நீளமும், 3.9 மீட்டர் அகலமும் கொண்ட முற்றமும் இதனைச் சுற்றிப் பல வடிவங்களில் சிறு சிறு அறைகளும் காணப்படுகின்றன. இவற்றில் உள்ள ஓர் அறையில் சுண்ணாம்பு கல்லால் (Lime Stone) ஆன புத்தரின் பாதம் கிடைத்துள்ளது. புத்தரின் பாதத்தில் மகாபுருஷலட்சணங்கள் என குறிப்பிடப்படும் ஸ்ரீவத்சம், பூர்ணகும்பம் போன்ற குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்தப் பாதம் ஆந்திரா மாநிலம் அமராவதி மற்றும் நாகார்ஜீனகொண்டா போன்ற இடங்களில் காணப்படும் புத்த சமயக் கலைப்பொருட்களின் கலைப்பாணியை ஒத்துள்ளதாகவும், அப்பகுதிகளிலிருந்தே கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும் என்றும் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். மேலும் மூன்று அங்குல தியான நிலையில் உள்ள புத்தர் சிலையும், பெண் தெய்வ சுடுமண் உருவங்களும், ஒரு பசுவின் எலும்பு படிமமும் கிடைத்துள்ளன.

மேலையூர்ப்பகுதியில் 1927ஆம் ஆண்டு அகழாய்வின் போது பூமிக்கடியிலிருந்து கிடைத்த தங்கமுலாம் பூசப்பட்ட கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த போதிசத்வ மைத்ரேயர் சிலை சென்னை அரசு அருங்காட்சியத்தில் உள்ளதாக இரா. நாகசாமி தனது ''**பூம்புகார்**'' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளதாக சோழ நாட்டில் பௌத்தம் குறித்து ஆய்வு செய்து வரும் முனைவர் ஜம்புலிங்கம் குறிப்பிடுகிறார். மேலும் இந்த சிலை சென்னை அரசு அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டு இருந்த போது காணாமல் போனதாக மேலையூர் புலவர் திரு நா. தியாகராஜன் குறிப்பிட்டார்.

படம்.3. பல்லவனேஸ்வர விகார் அமைப்பு





படம்.4. பல்லவனேஸ்வர விகார் கிடைத்த புத்த பாதம்



படம்.5. காணாமல்போன போதிசத்வ மைத்ரேயர் சிலை.



**பாதபீடிகை**

மணிமேகலை குறிப்பிடும் உவ்வனம் என்ற பூஞ்சோலையின் நடுவில் பளிங்கறை மண்டபத்தில் உள்ள புத்தரின் பாத பீடத்தை "மணிக்கச் சோதி பரந்த பதும பீடம்" என்றும் ''மணிபத்மமென்றும்'' ஆய்வாளர்கள் அழைப்பர். அதனை வழிபடுவோர் 'ஓம் மணிபத்மேஹூம்' என்ற மத்திரத்தை ஜபிப்பது பௌத்த சமய மரபாகும். மேலும் மணிமேகலை குறிப்பிடும் புத்தரின் பாத பீடத்தை கீழ்காணும்ப் பாடல்கள் மூலம் அறியாலாம்.

*''பள்ளைக்கறை மண்டபம் உண்டு அதனுள்ளது*

*தூநிற மாமணிச் சுடரொளி விரிந்த*

*தாமரைப் பீடிகை தான் உண்டு"*

*மணி. 3; 6466.*

*"மணியறைப் பிடிகை வலங் கொண்டு"*

*மணி. 5; 97*

*"ஆயிர ஆரத்து ஆழியந் திருந்தடி"*

*மணி. 5; 104.*

*"ஆதி முதல்வன் அறவாழி ஆள்வோன்*
*பாத பீடிகை பணிந்தனள் ஏத்தி"*
*மணி.* 6; 11-12.

காவிரிப்பூம்பட்டினத்தில் அமைந்துள்ள காவேரிக்கரையில் உவ்வனம் என்ற வயல் பகுதியில் பூஞ்சோலையின் நடுவிலே பளிங்கினால் அமைக்கப்பட்ட சிறு கோவில் தொல்லியல் துறையினர் அகழாய்வு மேற்கொண்டனர். அந்த அகழாய்வின் போது புத்தரது பாதபீடிகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்த பாதபீடிகை மணிமேகலையில் குறிப்பிடப்பட்டுள்ள புத்தரின் பாதபீடிகை என்று ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

### பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட அசோகர் காலப் பானையோடு

வானகிரி பகுதியில் தோசைக்குளமேடு என்னுமிடத்தில் அசோகர் காலத்து பிராமி எழுத்து பொறிக்கப்பட்டுள்ள சிவப்பு நிறப்பானையோடு ஒன்று கிடைத்துள்ளது. அப் பானையோட்டில் ஆறு எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு உள்ளன. "ஹாபாகேந்தரோ்" என்றும், ''அபி3 மக3 ததோ'' என்றும் இவ்வாசகத்தை படிக்கலாம், ''அபி'' என்னும் சொல்லுக்கு உயர்நிலையில் உள்ள பெண்களைக் குறிப்பிடப்படும் சொல்லாகும். பூம்புகாரில் கண்டெடுக்கப்பட்ட இந்தப் பானையோடு கி.மு. மூன்றாம் நூற்றாண்டை சேர்ந்தாகும். இதன் மூலம் சோழநாட்டில் பௌத்த சமய நுழைவுக்கு முக்கியச் சான்றாக இதைக் கருதலாம் என்று நடன காசிநாதன் தனது ''பூம்புகாரும் கடல் அகழாய்வும்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளதாக புலவர் நா. தியாகரான் "பூம்புகார் வரலாற்று எச்சங்கள்" என்ற நூலில் குறிப்பிட்டுயுள்ளார்.

**படம்.6. பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட அசோகர் கால பானையோடு**




1990-95ஆம் ஆண்டில் பூம்புகார் கடலில் இரண்டாம் கட்ட ஆய்வைத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையும், கோவாவில் உள்ள தேசிய ஆழ்கடல் ஆய்வு நிறுவனமும் இணைத்து மேற்கொண்டன. இந்த ஆய்வில் சுமார் 5 மீட்டர் தொலைவிலும், 70 அடி ஆழத்திலும் பண்டையக் காவிரியாற்றின் வடகரையையொட்டி மூன்று கட்டிடப்பகுதிகளும் தெற்குக்கரையை ஒட்டி இரண்டு கட்டிடங்களும் ஆய்வாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டன. வட கரையில் உள்ள கட்டிடம் ஒரு கோவிலாகவோ, கோட்டைக் கொத்தளமவோ, புத்த விகாரமாகவோ இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

நாகப்பட்டினம் சங்க காலத்தில் காவிரிபூம்பட்டினத்திற்கு அடுத்த நிலையில் இருந்த துறைமுகப்பட்டின நகரமாகும். சோழர்கள் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் அழிந்த பிறகு அந்நகரத்தின் அமைப்பைப் போன்றே நாகப்பட்டினம் சோழர்களால் உருவாக்கப்பட்டது. மேலும் கீழ்திசை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வணிக மையமாகவும், கீழ்திசை நாடுகளைச் சேர்ந்த மன்னர்கள் புத்த விகாரங்களை அமைத்து வழிபட்டு வந்ததின் மூலம் நாகப்பட்டினம் பௌத்தர்களின் தொன்று தொட்ட இடமாக விளங்கிது.

### நாகப்பட்டினத்தைப் பற்றிய வெளி நாட்டுப் பயணிகளின் குறிப்புக்கள்

கிரேக்க நாட்டு அறிஞரான தாலமி என்பவர் நாகப்பட்டினத்தை நிக்கௌா என்றும், போர்ச்சுகீசிய நாட்டைச் சேர்ந்த மார்கோபோலோ நாகப்பட்டினத்தை பட்டன் என்றும் குறிப்பிடுகின்றனர்.

### சீனப்பயணி யுவான்சாங்கின் பயணக்குறிப்பு

சீனப்பயணி யுவான்சாங் தம் பயணக் குறிப்பேட்டில்சோழநாட்டைச்சீனமொழியில் 'சூலியா' என்று குறிப்பிடுகிறார். அசோக மன்னரின் ஐந்தாவது கல்வெட்டில் சோழ நாட்டில், குறிப்பாக நாகப்பட்டினத்தில், விகாரங்களைக் கட்டியதற்கானக் குறிப்புகள் காணப்படுகிறன. அதை மெய்ப்பிக்கும் வகையில் சீனப்பயணி யுவான்சாங் கி.பி.629

645இல் தன் பயணக் குறிப்பேட்டில், அசோகர் கட்டியதாக குறிப்பிடும் விகாரை நாகப்பட்டினத்தில் கண்டதாகக் குறிப்பிடுகிறார்.

### பதரதிட்ட விகாரம்

அசோகர் கி.மு.265270ஆம் ஆண்டிற்கு இடைப்பட்டக் காலத்தில் நாகப்பட்டினத்தில் பதரதிட்ட விகாரைக் கட்டப்பட்டிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். மேலும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆச்சாரிய தருமபாலர் 'நெட்டிபகரணட்டகதா' என்ற உரை நூலை பாலி மொழியில் இவ்விகாரில் தங்கி இயற்றியதாக குறிப்பு காணப்படுகிறது.

### சூடாமணி விகாரம்

சோழர் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் அழிந்த பிறகு அந்நகரத்தின் அமைப்பைப் போன்றே நாகப்பட்டினம் சோழர்களால் உருவாக்கப்பட்டது. கீழ்த்திசை நாடுகளுக்கு வணிக மையமாகவும், சமயப்பண்பாட்டு மையமாகவும் சிறந்து விளங்கியது. கி.பி.11ஆம் நூற்றாண்டில் கடாரத்தரசன் ஸ்ரீமாறவிஜயோத்துங்கவர்மன் இராஜராஜன் அனுமதியுடன் தன் தந்தையின் நினைவாக நாகப்பட்டினத்தில் ஒரு பௌத்த விகாரை அவனது நாட்டைச் சேர்ந்த வணிகர்கள் வழிபாட்டுக்காகக் கட்டினான். இந்த விகாரத்திற்கு சூடாமணிவர்ம விகார் என்று தன் தந்தையின் பெயரைச் சூட்டினான். மேலும் இவ்விகாரின் இணைப்பாக கல்வி கற்பதற்கு ராஜராஜப்பெரும்பள்ளியையும், துயிலுவதற்கு இராஜேந்திர பெரும்பள்ளியையும் இராஜராஜன் கட்டிக்கொடுத்தான், இராஜராஜன் தனது 21வது ஆட்சியாண்டில் (1006) இவ்விகாருக்கு, நாகப்பட்டினத்திற்கு அருகில் உள்ள ஆனைமங்கலம் என்ற ஊரையும் அதன் வருவாயையும் கொடையாக வழங்கினான் என்ற செய்தி ஆனைமங்கலம் செப்புப் பட்டயத்தின் மூலம் அறியலாம், இப்பட்டய அளிப்பினை பின்னாளில் இராஜராஜனும் உறுதி செய்தான்.

மேலும் சூடாமணி விகாருக்கு வழங்கப்பட்டு வரும் கொடையை மீண்டும் உறுதி செய்யும் வகையில் முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் மேலும் சில ஊர்களைக் கொடையாகக் கொடுத்தான் என்ற செய்தி ஆனைமங்கலம் சிறிய செப்புப் பட்டயம் கூறுகிறது. மேலும் சிறிய ஆனைமங்கலம் செப்புப் பட்டயத்தில் இராஜேந்திரசோழப்பெரும்பள்ளி என்ற மற்றொரு விகார் இருந்ததாக குறிப்புக்காணப்படுகிறது. சூடாமணி விகாரம் ராஜராஜப்பெரும்பள்ளி என்றும் குறிப்பிடப்படுகிறது. மேலும் ஆனைமங்கலச் செப்புப்பட்டயங்கள் தற்போது நெதர்லாந்து நாட்டில் லெய்டன் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தில் உள்ளதால் அவை லெய்டன் பெரிய செப்புப் பட்டயம் என்றும், லெய்டன் சிறிய செப்பு பட்டயம் என்றும் அழைக்கப்படுகின்றன.

படம்.7. லெய்டன் செப்புப் பட்டயம்



வரலாற்று சிறப்புமிக்க இவ்விகாரங்கள் தற்பொழுது அழிந்துவிட்டன. இருப்பினும் சிறிய லெய்டன் செப்புப் பட்டயத்தின் மூலம் அங்கு மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் போது இவ்விகார் எங்கு இருந்தது என்பதை ஊகிக்க முடிந்தது. ஆயினும் ஆனைமங்கலச் செப்புப்பட்டயம் இவ்விகாரத்திற்கு 31 வேலி (சுமார் 200 ஏக்கருக்கும் மேல்) நிலப்பரப்பைக் கொண்டிருந்தாக குறிப்பிடுகிறது, இதன் கிழக்கு எல்லையாக கடல்கரையில் அமைந்த பெரிய மணற்குன்றும், தெற்கில் புகையுனிக்கிணறும், திருவீரட்டானமுடைய மகாதேவர் கோவில் நிலமும், பறவைக்குளத்து மாராயன் கல்லுவித்தகுளமும், மேற்கு எல்லையாக காரைக்கால் பெருவழிச் சாலையும், வடக்கில் வடகாடன்பாடி ஆகியவையும் குறிப்பிட்டுள்ளன. மேற்கூறிய எல்லைகளில் கிழக்கு எல்லையான கடற்கரையில் அமைந்துள்ள மணற்குன்று 1952 இல் ஏற்பட்ட புயலால் பாதிப்புக்கு உள்ளானதாக வரலாற்று ஆய்வுக் குழுவைச் சேர்ந்த திரு ராமச்சந்திரன் கள ஆய்விற்குச் செல்லும் போது குறிப்பிட்டார். மேற்கு எல்லையான காரைக்கால் பெருவழிச்சாலை தற்போது உள்ள நீதிமன்ற கட்டிடத்தின் பின்புறம் செல்லும் சாலை ஆகும். ஆனால் தற்போது காரைக்கால் சாலை நீதிமன்றத்திற்கு முன்பாக செல்கிறது. வடக்கு எல்லையான வாடகாடன்பாடி இப்பொழுது கடம்பாடி என்றழைக்கப்படுகிறது. தெற்கு எல்லையான புகையுனிக்கிணறும் அழிந்துவிட்டது. மகாதேவர் கோவில் நிலம் தற்போது வீட்டு மனைகளாக மாற்றப்பட்டுவிட்டது. ஆனால் குளம் மட்டும் தற்போது தாமரைக்குளம் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

நாகப்பட்டினத்தில் உள்ள நாகநாதர் கோவிலில் கி.பி. 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பராக்கிரம பாண்டியன் என்ற பெயர் குறிப்பிட்டு உள்ள கல்வெட்டு ஒன்றில் ராஜராஜப்பெரும்பள்ளி என்ற ஸ்ரீமாகேசுவரப்பெரும்பள்ளியின் திருப்பணிக்குக் கொடுத்தக் கொடையைக் குறிப்பிடுகிறது. இதில் குறிப்பிட்டுள்ள ராஜராஜப் பெரும்பள்ளி சந்தேகமின்றி ஆனைமங்கலம் செப்பேட்டில் குறிப்பிடப்படும் புத்த விகாரமே என்பது தெளிவாகிறது. ஆனால் கி.பி.15ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னனின் ஆட்சியின் கீழ் நாகப்பட்டினம் இருந்தபொழுது இவ்விகாரம் ஸ்ரீமாகேசுவரப் பெரும்பள்ளி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்று நாகநாதர் கோவில் கல்வெட்டு மூலம் அறியலாம்.

**படம்.8. நாகநாதர் கோவில் கல்வெட்டு**



பர்மாவில் கி.பி. 1476 ஆம் ஆண்டைச் சேர்ந்த பாலி மொழியில் உள்ள கல்யாணிக் கல்வெட்டில் நாகப்பட்டினத்தில் புத்த சமயம் சிறந்து விளங்கியதை பற்றி குறிப்பு காணப்படுகிறது. மேலும் இரண்டு பக்கங்களிலும் கல்வெட்டு தாங்கி நிற்கும் 10 தனித்தனி கல்வெட்டுப் பட்டியல்களில் இரண்டாவது கல்வெட்டு சித்திரதூதர், ராமதூதர் என்ற இரண்டு பிக்குகளின் தலைமையில் இரண்டு கப்பல்களில் இரு குழுக்களாக இலங்கைக்குப் புத்த சமயத்தை பரப்புவதற்காக அனுப்பப்பட்டதாகவும், இவற்றில் சித்திரதூதனின் கப்பல் கடலில் விபத்துக்குள்ளாகியதாகவும், ஆனால் சித்திரதூதன் மட்டும் நாகப்பட்டினம் (நவுபட்டினா) என்று துறைமுகத்தை வந்தடைந்து அங்கு சீன மன்னரால் கட்டப்பட்டிருந்த புத்த விகாரத்தை வணங்கியதாகவும் குறிப்புக் காணப்படுகிறது.

கி.பி.720 இல் நரசிம்ம போத்தவர்மன் என்னும் பல்லவ மன்னன் நாகப்பட்டினத்தில் ஒரு பௌத்தக் கோவிலைக் கட்டினான். வணிகத்தின் பொருட்டுச் சீன நாட்டிலிருந்து வரும் பௌத்தர்களுக்காகச் சீன அரசனின் விருப்பப்படி இக்கோவில் அமைக்கப்பட்டது. வெனிஸ் நாட்டை சேர்ந்த மார்கோபோலோ என்பவர் குறிப்பிடுவதாக மயிலை. சீனி. வேங்கடசாமி பௌத்தமும் தமிழும் என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

இந்திய வரலாற்றுச் சின்னங்களின் மீது பற்றுக் கொண்ட வால்டர் எலியட் என்ற ஆங்கிலேயர் நாகப்பட்டினத்தில்

19ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை கடற்கரைக்கு வரும் கப்பல்களுக்கு திசைகாட்டும் கலங்கரை விளக்கமாக விளங்கிய இருபெரும் கோபுரங்களை பற்றி Indian Antiquary volume 7, p. -224-227. என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் இக்கோபுரம் பொதுவழி கோபுரம் என்றும், பழைய கோபுரம் என்றும், சீன கோபுரம் என்றும், கருப்பு கோபுரம் எனறும் பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. மேலும் இக்கோபுரம் நான்கு பக்கள், மூன்று அடுக்குகளைக் கொண்டு முழுவதும் செங்கற்களால் கட்டப்பட்டது. இதில் எவ்விதமான கல்வெட்டுக்களோ, சிலைகளோ காணப்படவில்லை. இதுபோன்ற கட்டிடக்கலை அமைப்பு தென்னிந்தியாவில் வேறு எங்கும் இல்லை. ஆனால் இத்தகைய கட்டிட அமைப்பு ஜாவா மற்றும் சுமத்ரா நாடுகளில் பெருமளவில் காணப்படுகின்றன. ஆகவே இக்கட்டிடம் பழைய பௌத்த விகாரமாகவே இருந்திருக்கவேண்டும் என்று தொல்லியல் அறிஞர் ஜெயக்குமார் குறிப்பிடுகிறார்.

**படம்.9. நாகப்பட்டினத்தில் இருத்த பௌத்தக் கோவிலின் கோபுரம்**



பல்லவர் காலத்தில் நாகப்பட்டினத்தில் பௌத்தர்களுக்காக கட்டப்பட்டது இந்த புது வெளிக் கோபுரம் 1859 ஆம் ஆண்டில் நாகப்பட்டினத்தில் கிறிஸ்துவ சபையின் மதகுருக்களால் கட்டப்பட்டிருந்த சமய வழிபாட்டுக் கூடத்திற்குச் சூரிய ஒளி வருவதை இக்கோபுரம் தடுப்பதாலும், புதிதாக கட்டப்பட்டு, இருந்த தற்போது திருச்சியில் உள்ள புனித சூசையப்பர் கல்லூரிக்கு இக்கோபுரம் ஆபத்தை விளைவிக்கும் என்ற காரணத்தாலும் இக்கோபுரத்தை இடிக்கவும், அதிலிருந்து கிடைக்கும் பொருட்களைக் கொண்டு புதிய கல்லூரி கட்டுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதி வேண்டி சென்னை ஆளுநர் நேப்பியரை நாகப்பட்டின கிறிஸ்து சபையின் மதகுருக்கள் கேட்டுக்கொண்டனர். கிறிஸ்துவ சபை தவிர வேறு எந்த பிரிவினரும் இக்கோபுரத்தை இடிக்க விரும்பாததால் ஆளுநர் உடனடியாக அனுமதி அளிக்க இயலவில்லை.

இருப்பினும் நிர்பந்தத்தின் காரணமாக 1867ஆம் ஆண்டு கோபுரத்தை இடிக்கவும் அதில் உள்ள பழைய பொருட்களைக் கொண்டு கல்லூரி கட்டுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டது. இங்குக் கட்டப்பட்ட கல்லூரிக் கட்டிடங்கள் இன்று காவல்துறை, வருவாய்த்துறை மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களாக செயல்பட்டு வருகின்றன. இதில் சில இடிந்துபோன கட்டிடப் பகுதி சுவர்களுக்குள் பழைய விகாரங்களில் பயன்படுத்தப்பட்டிருந்த செங்கற்களும், சோழர்கால ஓடுகளும் காணப்பட்டன. மேலும் இதன் அருகில் கிருத்துவ மத குருக்களால் கட்டப்பட்ட சமய வழிபாட்டு கூடம் தற்போது நீதிமன்றமாக செயல்பட்டு வருகிறது. இவ்வழிபாட்டுக் கூடத்திற்கு சூரிய ஒளி வருவதை இக்கோபுரம் முற்றிலும் தடுக்கிறது என்ற விடயங்களை கருத்தில் கொண்டு கல்வெட்டு ஆய்வாளர் திரு பா. ஜெயக்குமார் கள ஆய்வு மேற்கொண்ட பொழுது வழிபாட்டுக் கூடத்தின் முன்பு நூறு அடி தொலைவில் பூமியில் செங்கற்கள் பரப்பப்பட்டு உள்ளது போன்ற கட்டிடபகுதிகளும், பரவலாகவும், தொடர்ச்சியாகவும், பல இடங்களில் காணப்பட்டன. மேலும் இப்பகுதியில் சீனக்களிமண் வகை மண்பாண்டச் சில்லுகளும், சோழர் கால ஓடுகளும் இங்கு அதிகமாக கிடைத்தன. இப்பகுதி பெரும்பாலும் விகாரம் நின்ற இடமாகவே இருக்கலாம் என்று இவர் குறிப்பிடுகிறார்.

கி.பி. எட்டாம் மற்றும் ஒன்பாதம் நூற்றாண்டில், நாகப்பட்டினத்தில் இருந்த பௌத்த விகாரொன்றில் முழுவதும்

பொன்னாலான புத்தர் சிலையைத் திருமங்கையாழ்வார் கவர்ந்து கொண்டு போய், அப்பொன்னைக் கொண்டு திருவரங்க கோவிலுக்கு மதில் சுவர் கட்டியதாகக் குருபரம்பரப் பிரபாவம் முதலிய வைணவ நூல்களில் குறிப்புகள் காணப்படுவதாக மயிலை. சீனி. வேங்கடசாமி பௌத்தமும் தமிழும் நூலில் குறிப்பிடுகிறார்.

## நாகப்பட்டின புத்த செப்பு திருமேனிகள் மற்றும் கற்சிலைகள்

காவிரிப்பூம்பட்டினத்தில் முழுமையான பௌத்த விகாரங்கள் தொல்லில் துறை அகழாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் நாகப்பட்டினத்தில் இருந்த எண்ணற்ற பௌத்த விகாரங்கள் சுவடுகளே தெறியாமல் அழிக்கப்பட்டுவிட்டன. ஆனால் அவற்றில் இருந்த எண்ணற்ற புத்தரது செப்புத்திருமேனிகள் மற்றும் கற்சிலைகள் கிடைக்கின்றன. இவற்றின் மூலம் நாகப்பட்டினத்தில் பௌத்த சமயம் சிறப்புற்று விளங்கியதை அறியலாம்.

சூடாமணி விகாரம் இருந்த இடத்தில், தற்போதைய வெளிப்பாளையம் மற்றும் நாணயக்காரத்தெரு ஆகிய இடங்களில் கி.பி.1867 1954 வரையிலும் சுமார் 350 உலோக புத்தர் சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. இவை அமராவதி மற்றும் நாகார்ஜீன கொண்டாவில் கிடைத்த புத்த உருவங்களின் தன்மையையே ஒத்திருந்தன. வெளிப்பாளையத்தில் விகாரத்தை ஒட்டியிருந்த பதினொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த இலுப்பை மரத்தை கிறிஸ்தவ சபையினர் வெட்டும் போது, அம்மரத்தின் அடியில் ஐந்து புத்தர் உருவச் சிலைகள் கிடைத்தன. அவற்றில் ஒன்று மட்டும் சீனக் களிமண்ணால் உருவாக்கப்பட்டிருந்தது. மேலும் இவையனைத்தும் பர்மா, இந்தோசீனா மற்றும் இந்தோனேசியாவில் இருந்து கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும் என்று பர்னல், போகாக்ஸ், பெர்குசன், எலியட் போன்ற அறிஞர்கள் கருதுகின்றனர்.

நாகப்பட்டினத்தில் கண்டெடுக்கப்பட்ட புத்தரது செப்புத்திருமேனிகள் மற்றும் கற்சிலைகள் இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் உள்ள அருங்காட்சியகங்களில் காணப்படுகின்றன. மேலும் நாகப்பட்டினத்தில் கண்டெடுக்கப்பட்ட புத்தரது சிலை ஒன்று ஜப்பானில் உள்ள இடிமிட்சு அருங்காட்சியக வெளியீடான ராக்ஃபெல்லர் சேமிப்பில் (Rockfeller 3rd Collection) இடம்பெற்றுள்ள ஒரு வெண்கல புத்தர் சிலை கி.பி.11 மற்றும் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தாகக் காணப்படுகிறது.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இந்தியா அடிமைப்பட்டிருந்த போது நாகப்பட்டினத்தில் தொடர்ந்து புத்தர் சிலைகள் கிடைத்துள்ளன. அவற்றை ஆங்கிலேயர்கள் விரும்பும் வகையில் இந்தியாவிலிருந்து லண்டன் மாநகருக்கு எடுத்துச் சென்று விக்டோரியா ஆல்பர்ட் அருங்காட்சியகத்திலும் பிரிட்டிஷ் அருங்காட்சி யகத்திலும் வைத்துக் கொண்டனர். மேலும் லண்டனில் உள்ள விக்டோரியா ஆல்பர்ட் அருங்காட்சியகத்தில் ஐந்து புத்த சிலைகளுள் ஒன்று மட்டும் கி. பி.11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தாகும். மற்ற நான்கு சிலைகளும் கி. பி. 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் உள்ள 14 புத்தர் சிலைகள் கி. பி. 11ஆம் நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடி வட்டத்தில் அமைந்துள்ள சின்னமேடு என்ற சிற்றூர் பூம்புகாரிலிருந்து தெற்கே மூன்று கிலோ மீட்டர் தொலைவில் கடற்கரையை ஒட்டி சின்னக்குடிக்கு அருகில் உள்ள ஒரு சிறு கிராமம் ஆகும். கடற்கரையிலிருந்து ஒரு மீட்டர் தொலைவில் ராமசாமி என்ற மீனவர் மீன்பிடிக்கும் போது வலையில் புத்தர் சிலை ஒன்று கிடைத்தது. இந்த சிலையைக் காப்பாட்சியர் திரு கா. நெடுஞ்செழியன் கி. பி. ஒன்றாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தாகக் குறிப்பிடுகிறார்.

இந்தச் சிலை 57 சென்டி மீட்டர் உயரமும், 25 சென்டி மீட்டரும் அகலமும் கொண்டு, சாம்பல் நிறமுடைய ஒருவகைக் கல்லாலும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்புத்தர் சிலை நின்ற நிலையில்

காணப்படுகிறது. கழுத்து முதல் கால் வரை சிலை உடைந்து காணப்படுகிறது. கீழே சரிந்து விழும் ஆடை ஆகியவற்றை கொண்டு இவ்வுருவம் புத்தர்தான் என அறிந்து கொள்ள முடிகிறது. ஏனெனில் இவற்றில் பெரும்பாலானப் பகுதிகள் கடல்பூச்சியால் அரிக்கப்பட்டுள்ளது. இப்போது இச்சிலை பூம்புகார் ஆழ்கடல் அகழாய்வு வைப்பகத்தில் காணப்படுகிறது.

**படம்.10. புத்தர் சிலை, பூம்புகார் ஆழ்கடல் அகழாய்வு வைப்பகம்.**



### கிராந்தி புத்தர் சிலை

நாகை மாவட்டத்தில் புத்தமங்கலம், குரும்பூர், குத்தாலம், பெருஞ்சேரி புஷ்பவனம், பூம்புகார் ஆகிய இடங்களில் புத்தர் சிலைகள் காணப்படுகின்றன. என்று சோழ நாட்டில் பௌத்தம் குறித்து ஆய்வு செய்து வரும் முனைவர் பா. ஜம்புலிங்கம் குறிப்பிடுகிறார் மேலும் அவர் பூம்புகாரில் உள்ள புத்தர் சிலைகள் நின்ற கோலத்தில் காணப்படுவதாகவும், கிராந்தியில் காணப்படும் புத்தர் சிலை 32 அடி உயரமும் 22 அடி அங்குல, அகலமும் கொண்டிருந்ததாகவும், சிலையின் முகம் முற்றிலும் சிதைந்த நிலையில் தலையில் சுருள் முடி அழகாகவும் வடிவமைக்கப்பட்டு உள்ளதாகவும், அதன் மேலுள்ள தீச்சுடர் உடைந்த நிலையிலும், நீண்ட தொங்கிய காதுகளும், அகன்ற மார்பும், பரந்த தோள்களும் இடது கையின் மீது வலது கையை வான் நோக்கிய நிலையிலும், அதன் உள்ளங்கையில் தர்மகரகுறியும் தியான கோலத்தில் அமர்ந்த நிலையிலும் காணப்படுவதாகவும், சிலையின் பீடத்தில் '**கிராந்தி தெப்பிள்ளை**' என்னும் 11 மற்றும் 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் எழுத்து பொறித்த கல்வெட்டு காணப்படுகிறது என்றும் கூறுகிறார்.

படம்.11. கிராந்தி புத்தர்



### வேளாங்கண்ணி சந்தைத்தோப்பு புத்தர்

வேளாங்கண்ணி மற்றும் வெள்ளாற்கங்கரையின் அருகே சந்தைத்தோப்பு என்னுமிடத்தில் அமர்ந்த நிலையில் காணப்படும் புத்தர் சிலையை வரலாற்று ஆர்வலர் குழுவின் முதன்மை செயலாளர் திரு ராமச்சந்திரன்

கண்டுபிடித்தார். இந்த சிலை தலையின்றி 32 அடி உயரமும், 22 அடி அகலத்தையும், கையிலிருந்த தர்ம சக்கரம் சிதைந்த நிலையிலும், மார்பில் ஆடை அழகாகவும், வலது கை கட்டை விரல் உடைந்தும் காணப்படுகிறது. இதன் காலம் கி.பி.10 ஆம் மற்றும் 11 ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று சோழ நாட்டில் பௌத்தம் குறித்து ஆய்வு செய்து வரும் முனைவர் பா. ஜம்புலிங்கம் குறிப்பிடுகிறார்.

**படம்.12. தலையின்றி காணப்படும் வேளாங்கண்ணி சந்தைத்தோப்பு புத்தர்**



**முடிவுரை**

பௌத்தம் இந்தியாவெங்கும் வணிகப்பாதைகள் வழியாகச் சென்று கல்வி, மருத்துவம் இரண்டின் வழியாக இந்தியாவின் வேறுபட்ட இனக்குழுக்களுடன் தொடர்பையும், உரையாடலையும் உருவாக்கின. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் பௌத்த சமயம் சோழ நாட்டிற்கு வந்த செய்தியை அசோகரின் பிஷாவர் கல்வெட்டு மூலம் அறியலாம். சோழநாட்டில் பௌத்தம் இருந்ததிற்கான அடையாளங்களாகப் பல்லவனேஸ்வரம் மற்றும் நாகப்பட்டினத்தில் சில விகார எச்சங்கள், பசுவின் எலுப்புகள், சுண்ணாம்புக்கல்லால் ஆன புத்தரின் பாதங்கள், சுடுமண் உருவங்கள், கற்சிலைகள், செப்பு திருமேனிகள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள் போன்ற பௌத்தம் தொடர்பான எச்சங்கள் ஏராளமாக கிடைத்து உள்ளன. இதன் மூலம் அசோகர் காலம் தொடங்கி பிற்கால சோழர்காலம் வரை சோழநாட்டில் குறிப்பகாக பூம்புகார் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் பௌத்தம் செல்வாக்கு பெற்று இருந்ததை அறியலாம். மேற்கண்ட இலக்கியங்கள், தொல்லியல், வரலாற்று ஆய்வுகள் அடிப்படையில் நாகப்பட்டினத்தில் சமய அடிப்படையிலான ஆய்வை (Religious Studies) மேற்கொள்ளலாம்.

## References


Arulmozhi, Muthusami., K. (2008), *Poombukar Aalkadal Agalvaipagak kaiyedu*. Chennai: Tamil Nadu Arasu Tholiyil Thurai.

Chakravarti, N., P. (1935). *Epigraphia Indica,* Vol.XXIII. New Delhi.

Editor (02.05.2013). *Nagapatinam Arugeh Bhuthar Silai Kanupidupu*. Trichy: Dinamalar

Jas Burgess. (1878). *Indian Antiquary* Volume 7. Delhi: Swati Publication.

Jambulingam. B. Bowdha suvatai thaedi grandhi, sandhai thoppuh bhuddhar mattrum kala aaivu. Chola Naatil bowtham valipoo https://ponnibuddha.blogspot.com/2013/06/blog-post.html?m=1

Kandhasami, S., N. (2005). *Thathuva Nokil Tamil Ilakiyam.* Chidambaram: Meyyapan Pathipagam.

Luders, H., Waldschmidt., E, Mehendale., M., A. (1963). *Corpus Insoriptionum Indicarum.* Vol .2. Ootacamund: Governent Epigrphist for India.

Mayilai Seeni, Venkatasami. (1940). *Bowthamum Tamilum*. Chennai: Kazhaga veliyidu.

Mayilai Seeni, Venkatasami. (2010). *Bhudda Jaathaga Kathaigal.* Chennai: Naam Tamilar Pathipagam.

Marxia Gandhi, N., Rajagopal, S. (2007). *Nagapatina Mavatta Kalvetugal.* Chennai: TamilNadu Arasu Tholliyal Thurai.

Nadana Kasinathan, Dhamodharan, K. (2009). *Kalvetu Or Arimugam.* Chennai: TamilNadu Arasu Tholporul Aaivu Thurai Veliyidu.

Ovai ilanjeran. (1996). *Nagapatinam.* Chennai: Manivasagar Pathipagam.

Rajam, V., S., V. (1977). *Bilii (Ki. Pi. 23-79).* Chidambaram: Manivasgar Noolagam.

Rajam, V., S., V. (1999). *Yuanzang*. Chidhambaram: Manivasagar Noolagam.

Ramalingam, P. (1995). *Barani*. Thanjavur: Aaivalargal Kazhaga Veliyidu, Tamil Palkalaikazhagam.

Ramachandran, T., N. (1954). *The Nagapattinam and other Buddhist Bronzes in The Chennai Museum.* Chennai: Government of Tamilnadu.

Ragavaiyangaar, M. (1984). *Aaratchi Thoguthi.* Thanjavur: Tamil Palkalikazhagam.

Swaminatha Iyar, U., V. (1927). *Silapathikara Moolamum Arumbathavurayum Adiyarkunallarurayum.* Chennai: Kabir Acchokoodam.

Swaminatha Iyar, U., V. (1927). *Manimegalai Moolamum Arumbadhavurayum.* Chennai: Kesari Acchukoodam.

Soundara Rajan, K., V. & Raman, K., V. (1994). *Kaveripattinam Excavations (1963-73.)* New Delhi: Archaeologlcal Survey of India.

Sundharamoorthi & Ethirasan Muthu. (2006). *Nagapatinam Mavatah Thadayangal Thogithi 1*. Chennai: Manivasgar Pathipagam.

Swaminatha Iyar, U., V. (1931). *Pathupaatu Moolamum Urayum.* Chennai: Kesari Acchukoodam.

*Tamil Kalai Tamiliyal Kalaanduh Aaivithal.* (1994). Thanjavur: Tamil PalkalaiKazhagam.

Thiagarajan, N. (2007). *Boombukar Varalatru Yechhangal*. Coiambatore: Manivasagar Arulpanimandram.